# 12 ஆலய வழிபாடு

இறைவன் எங்கும் இருக்கின்றார். அவரை எங்கும் வணங்கலாம். ஆயினும், இறைவன் ஆன்மாக்களின் வழிபாட்டை ஏற்று அருள்புரியும் இடம் ஆலயம் என்பதால், அங்கு சென்று கடவுளை வணங்குவதே சிறப்பானதாகும். ஆலயம் என்பதற்கு ஆன்மா லயப்படும் இடம் எனப் பொருள் கூறுவர்.

நாம் தினமும் ஆலயத்துக்குச் சென்று வழிபடுதல் நன்று. தினமும் செல்ல முடியாதவர்கள் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, மாதப்பிறப்பு, தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு முதலான விசேட தினங்களிலாவது ஆலயத்துக்குச் சென்று வழிபடுதல் வேண்டும்.

ஆலயம் புனிதமான இடம், ஆதலால் ஆலயத்துக்குச் செல்ல முன் நீராடி, தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிந்து விபூதி தரித்துத் தூய்மையுடன் செல்லுதல் வேண்டும். பழம், பாக்கு, வெற்றிலை, கற்பூரம், தேங்காய், பால், இளநீர், பூக்கள் முதலான பூசைப் பொருட்களைத் தூய்மையான தட்டில் வைத்து, அரைக்கு மேலே தாங்கிக் கொண்டு, இறை சிந்தனையுடன் ஆலயத் துக்குச் செல்லுதல் வேண்டும்.



ஆலயத்தை அண்மித்ததும், முதலில் கோபுரத்தை வணங்க வேண்டும். அதன் பின் அங்குள்ள நீர் நிலைகளில் கால்களைக் கழுவிச் சுத்தம் செய்து, சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு, உள்ளே செல்ல வேண்டும். அங்கு பலிபீடத்துக்கு இப்பால் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும். பின்னர், நந்தி தேவரை வணங்கி அனுமதி பெற்று, முதலில் விநாயகப் பெருமானை வணங்க வேண்டும். அவரை வணங்கும் முறை பற்றி, 'விநாயகர்' என்ற பாடத்தில் படித்துள்ளோம்.

விநாயகரை வணங்கியபின், மூலமூர்த்தியாகிய சிவலிங்கப் பெருமானையும், உமா தேவியாரையும் வணங்கி, விபூதி வாங்கித் தரித்துக் கொண்டு. அதன் பின் நடராஜப் பெருமான், தட்சணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், வைரவர் முதலிய மூர்த்திகளையும் வணங்க வேண்டும். இறுதியில் சண்டேசுவரரைக் கும்பிட்டு, மூன்று முறை கைகொட்டி, சிவதரிசன பலனைத் தரும்படி பிரார்த்தித்து. பின் சிவசந்தியை அடைந்து வணங்க வேண்டும். அதன் பின் அமைதியான ஓர் இடத்தில் இருந்து, திருவைந்தெழுத்தைச் செபிக்க வேண்டும்.

சுவாமி சன்னிதிகளில் அவ்வவ் மூர்த்திகளை வணங்கும் போது, இரண்டு கைக-ளையும் மார்பிலும் அல்லது சிரசிலும் குவித்துக் கொண்டு தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைப் பாடல்களை ஓதுதல் வேண்டும். இறை நாமங்களையும் உச்சரித்தலும் நன்று. அவை யாவும் பிறர்க்கு இடையூறு இல்லாதவகையில் செய்தல் அவசியமாகும்.





ஆலயத்தில் செய்யக்கூடிய தொண்டுகள் பல உள்ளன. அவற்றுள் கோயிலைக் கூட்டுதல், கழுவுதல், பாத்திரங்கள், மணி என்பவற்றை விளக்குதல், தூபமிடுதல், விளக்கேற்றுதல், சாமரை வீசுதல், தீவர்த்தி பிடித்தல், குடை ஆலவட்டம் கொடி என்பவற்றைப் பிடித்தல் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.





பூந்தோட்டம் அமைத்தல் பூந்தோட்டத்துக்கு நீர் ஊற்றல், பூக்கொய்தல், பூமாலை கட்டுதல் என்பனவும் ஆலயத் தொண்டுகளில் அடங்கும். அவை சிவ புண்ணியச் செயல்களாகும். நீங்களும் அவ்வாறான செயல்களைச் செய்ய முன்வர வேண்டும்.

ஆலயத்துக்குச் சென்று வழிபடுவதனால், நமது ஐம்பொறிகளும் ஒடுங்கி, இறைவனை நாம் நினைப்பதற்கு வழியேற்படுகின்றது மேலும், ஆலயங்களில் தெய்வ அருள் நிறைந்திருப்பதால், அங்கு எமது மனம் அமைதி பெறும்; வாழ்வு வளம் பெறும், ஆன்மா ஈடேற்றம் அடையும்.

**'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'**

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஆலயம் என்பதன் பொருள் யாது?
2. நீங்கள் ஆலயத்துக்குச் செல்லும் விசேட தினங்கள் மூன்று தருக.
3. ஆலயத்துக்குச் செல்ல முன், நீங்கள் செய்ய வேண்டியவை யாவை?
4. ஆலயத்தில் செய்யப்படும் நமஸ்கார முறைகள் இரண்டையும் குறிப்பிடுக.
5. ஆலயத்தில் நீங்கள் செய்யும் தொண்டுகள் ஐந்தினை எழுதுக.

**02. கீழே தரப்பட்டுள்ள சொற்களை வைத்து, வெற்றிடங்களை நிரப்புக.**

சண்டேசுரர், பஞ்சாங்க, திருமுறைப் பாடல்கள், விநாயகர், பூசைப் பொருட்ருகள்

1. ஆலய வழிபாட்டில் முதலில் வழிபடும் தெய்வம் ........................... தெய்வம் ........................... ஆவார்.
2. பழம், பாக்கு, வெற்றிலை, கற்பூரம், தேங்காய் என்பன ........................... என அழைக்கப்படும்.
3. ஆலய வழிபாடு செய்யும்போது பெண்கள் ........................... நமஸ்காரம் செய்ய வேண்டும்.
4. சுவாமி சந்நிதியில் ........................... ஓதுதல் வேண்டும்.
5. சிவதரிசன பலனை ........................... தருபவர் ........................... ஆவார்.

## செயற்பாடு

1. ஆலயத்துக்குச் செல்லுமுன் செய்யவேண்டிய முன் ஆயத்தங்களைப் படிமுறையாக எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
2. ஆசிரியருடன் கோயிலுக்குச் செல்க. அல்லது வகுப்பறையை, கோயிலின் உட்பகுதியாக நினைத்து, அங்கு வழிபடும் ஒழுங்கு முறையைச் செய்து காட்டுக.

### பாடச்சுருக்கம்

- ஆலயம் என்பது ஆன்மா லயப்படும் இடமாகும்.
- ஆலயத்துக்கு நாள்தோறும், விசேட தினங்களிலும் செல்லல் வேண்டும்.
- ஆலயத்துக்குச் செல்லும் முன் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் பல உள்ளன. (படிமுறை விளக்கம்)
- பூசைப் பொருட்கள், அவற்றைச் சேகரித்து எடுத்துச் செல்லும் முறை என்பன தரப்பட்டுள்ளன.
- ஆலயத்தினுள் பின்பற்றப்படும் வழிபாட்டு ஒழுங்கு முறைகள் பல உள்ளன.
- ஆலயத்தினுள் மற்றவர்களுக்கு இடையூறு செய்யாத வகையில் வழிபட வேண்டும்.
- ஆலயத்தில் செய்யக்கூடிய தொண்டுகள் பல உள்ளன.
- ஆலய வழிபாட்டினால் பல நன்மைகள் கிடைக்கும்.